**சென்னை – 32, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**முன்னிலை: திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.எண்.பொறிபி3/38869/2023** **நாள்.23.09.2024**

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி – 4ல் அடங்கிய பணிகள் – நேரடித் தேர்வு – தேர்வு நாள் 24.07.2022 (அறிவிப்பு எண் 07/2022, நாள் 30.03.2022) இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு பணி நியமன ஆணை வழங்கியது – பணியில் சேர்ந்தது – இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை : 1 சென்னை –5 வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைஎண் அநிபி 5/92705/2023 நாள். 08.12.2023.

2 இவ்வலுவலக. செயல்முறை ஆணை எண் பொறிபி.3/38869/2023 நாள் 12.12.2023.

******

**ஆணை:**

பார்வை 1–இல் கண்ட செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் 24.07.2022 (அறிவிப்பு எண்.07/2022, நாள். 30.03.2022) அன்று நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகள் மூலம் தற்காலிகமாகத் தெரிந்தெடுக்கப்பட்டு, இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2 – இல் காணும் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக இவ்வலுவலகத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு, இவ்வலுவலகத்தில் பணிபுரியும் கீழ்காணும் இளநிலை உதவியாளருக்கு (பிணையமற்றது), பார்வை 1–இல் காணும் செயல்முறை ஆணையில் தெரிவித்துள்ளவாறு "The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras /Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination–IV (Group– IV services)" நிபந்தனையின்பேரில் கலம் 4–இல் உள்ளவாறு கீழ்கண்ட விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி திருவாளர்கள் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | ரா.சதீஸ்குமார், இளநிலை உதவியாளர் (பிஅ) | 22.12.2023 மு ப | 22.12.2023 மு ப | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக முதன்மை செயலர்/ஆணையர் அலுவலகம், கிண்டி, சென்னை 32 |

மேலும், பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவியில் கலம் 4-இல் உள்ளவாறு பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு தொடர் பணியில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

ஒம்/-கோ.பிரகாஷ்
முதன்மை செயலர்/ஆணையர்

பெறுநர்
திரு.ரா.சதீஸ்குமார், இளநிலை உதவியாளர் (பிஅ), இவ்வலுவலகம்.
நகல் -வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை - 05
நகல் - வேளாண்மை கூடுதல் இயக்குநர், இவ்வலுவலகம்
நகல் - ஆட்சி அலுவலர், இவ்வலுவலகம்
நகல் - முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் நேர்முக உதவியாளர், இவ்வலுவலகம்
நகல் - பொறிபி 3 இருப்பு கோப்பு

//உத்தரவின்படி//

ஆட்சி அலுவலர்